# கார்டமம் பிளாண்டர்ஸ் அசோசியேசன் காலேஜ்

(பொன்விழா ஆண்டு 1974 – 2024)

தேசியத்தர மதிப்பீட்டில் 'A' அங்கீகாரம் பெற்றது

பங்கஜம் நகர் : போடிநாயக்கனூர் - 625 582
தேனி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.

## தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)

நடத்தும்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

## International Conference

## "தமிழிலக்கியங்களில் மானுட வாழ்வியலும் மதிப்புகளும்"

## Human Ethics and Values in Tamil Literature

# அறிவிப்பும் அழைப்பும்

**கருத்தரங்கம் நடைபெறும் நாள் : 24.01.2025**

**கட்டுரைகள் அனுப்ப கடைசி நாள் : 02.01.2025**

**நிகழிடம்**

**திரு. சுப்புராஜ் நினைவு குளிரரங்கம்**

கார்டமம் பிளாண்டர்ஸ் அசோசியேசன் காலேஜ்
பங்கஜம் நகர் : போடிநாயக்கனூர் – 625 582
தேனி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.

**அன்புடையீர், வணக்கம்!**

எமது கார்டமம் பிளாண்டர்ஸ் அசோசியேசன் காலேஜ் உயர் கல்வியின் பயன் கிராமப்புற மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கில் 1974 ஆம் ஆண்டு கார்டமம் பிளாண்டர்ஸ் அசோசியேசன் அலுவலகக் கட்டிடத்தில், மதுரை காமராசர் பல்கலைக்கழக அனுமதியுடன் இரண்டு பாடப்பிரிவுகளுடன் தொடங்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டு முதல் இக்கல்லூரி தற்போது இயங்கிவரும் இடத்தில் தனக்குச் சொந்தமான 43 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்து அமைந்துள்ளது. இந்தியாவிலேயே விவசாயிகளால் நடத்தப்படும் ஒரே கல்லூரி என்ற பெருமையுடன், மேற்குத் தொடர்ச்சிமலை அடிவாரத்தில் மதுரை-மூணாறு தேசிய நெடுஞ்சாலையில் பசுமையான சூழலில் அமைந்துள்ளது. மேலும், இவ்வாண்டு தனது பொன்விழா (1974-2024) ஆண்டினைக் கொண்டாட தயாராகி வருகின்றது.

இக்கல்லூரியின் மணிமகுடமாக 2019-20ஆம் ஆண்டு முதல் இளங்கலைத் தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவில் துவங்கப்பட்டு சீரிய முறையில் ஆசிரியர் பணியை மாணவச் சமுதாயத்திற்கு ஆற்றி வருகின்றது. மேலும், மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசு போட்டித்தேர்வுத் தயார்படுத்துதல், படைப்பாற்றலை வளர்த்தல், பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்கங்கள், சொற்பொழிவுகள், புத்தக வாசிப்பை ஊக்கப்படுத்த வியாழ வட்டம் போன்றவற்றைச் சிறப்பாக நடத்தி வருகின்றது. எமது துறையில் 2020-21 ஆம் கல்வியாண்டில் 'கீழடியும் தமிழும்' என்ற தலைப்பிலும், 2021-22 ஆம் கல்வியாண்டில் 'பன்முகப் பார்வையில் பாரதி' என்ற தலைப்பிலும், 2022-23 ஆம் கல்வியாண்டில் 'தொல்லியல்: இலக்கியமும் வரலாறும்' என்ற தலைப்பிலும், 2023-24 ஆம் கல்வியாண்டில் 'தமிழ் சினிமாவும் சமூக மாற்றமும்' என்ற தலைப்பில் கருத்தரங்கமும் நடத்தப்பட்டது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தற்போது "தமிழிலக்கியங்களில் மானுட வாழ்வியலும் மதிப்புகளும்" என்னும் பொருண்மையில் நடத்த இருக்கிறோம்.

பன்னெடுங்கால தொன்மையும் தொடர்ச்சியும் கொண்ட தமிழிலக்கியத்தில் மனித வாழ்வின் மேன்மைகள் குறித்த சிந்தனைகள், தத்துவங்களாகவும் கலையாகவும், செயல்முறையாகவும் இடம்பெற்றுள்ளன. நடைமுறை வாழ்வில் மனிதர்கள் கடைபிடிக்க முற்படுகின்ற அறங்கள் அவர்களின் மதிப்பையும், மாண்பையும் உயர்த்துகின்றன. வாழ்வே இலக்கியமாக உருப்பெறுகின்ற தன்மையை தமிழிலக்கியங்கள் கொண்டுள்ளன. மன்னர்கள் ஆட்சியின் போதும் மக்களாட்சியின் போதும் இலக்கியங்கள் மனிதர்களைப் போற்றுகின்றன. மனித வளத்தையும், அற விழுமியங்களையும் குறித்துத் தொடர்ந்து போதனை செய்கின்றன. அற இலக்கியங்கள் மட்டுமின்றி தமிழில் தோன்றிய அனைத்து வகைமை இலக்கியங்களிலும் மனித அறமே விஞ்சி நிற்கின்றது என்பர் மானுடநேய அறிஞர்கள். மனிதத் தன்மைதான் உலகில் அழியாச் செல்வமாக நிலைத்து நிற்கும் என்பதால் தான் போரொழிந்த வாழ்வை மக்கள் விரும்பினார்கள். அடுதலும் தொடுதலும் கால வகையினான எனக் கூறப்பட்டாலும் மாந்தர்தம் பசி தீர்த்தலை தலையாயக் கடமையாகக் கொண்ட ஆபுரத்தினும் மணிமேகலையும் காப்பிய மாந்தர்களாக மனிதர்களுக்கு வழி காட்டுகின்றனர். அத்தகைய நேயமிக்க தமிழிலக்கியம் இன்றைக்கும் நுண்மையான கதை களங்களைத் தேர்ந்தெடுத்து வெளிப்படுத்தி வருகின்றன. சிக்கலான சமூகமாக இன்றைய சமூகம் காணக் கிடைக்கின்றது. போர்களை ஆராதிக்கும் மனநிலை, வன்முறையை வரவேற்கும் மனநிலை ஆகியன மனித நேயத்தை வறட்சியடையச் செய்வனவாகும். தமிழ் இலக்கியங்கள் போற்றி வளர்த்த மானுட நேயமும் மனித விழுமியங்களும் தற்காலச் சமூகத்தினரிடம் துளிர்விட வேண்டும் என்பதை இக்கருத்தரங்கப் பொருண்மை நோக்கமாகக் கொள்கிறது. மானுட வாழ்வியலைப் பற்றி படர்ந்துள்ள பல்வேறு கருத்துக் களங்களைக் கட்டுரைகள் களமாகக் கொள்ளலாம். விழுமியங்களையும் மதிப்புகளையும் வெளிப்படுத்தும் வகையினவாக கட்டுரைகள் அமைவது நலம். ஆய்வாளர்களும், பேராசிரியர்களும் இலக்கிய ஆர்வலர்களும் கட்டுரைகள் அளிக்கலாம். கருத்தரங்கத்தில் கட்டுரை வாசித்தளித்தல் என்பது மனிதநேய மாண்பினை உணர்த்தும் ஓர் அரிய செயல் என்பதால் கட்டுரைகளைக் கருத்தரங்க நாளன்று வாசித்தளிக்க வேண்டுகிறோம்.